# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 07.08.2018

## இந்திய நிகழ்வுகள்

- உத்திர பிரதேச மாநிலம் ‘முகஹல்சரை’ இரயில்வே நிலையத்தின் பெயர், தீனதயாள் உபாத்யாயா என அதிகாரப்பூர்வமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- **குறிப்பு**
  - 1968ம் ஆண்டில் ஜன சங்கத் தலைவர் தீன்தயாள் உபாத்யாயா, முகஹல்சரை இரயில் நிலையத்தின் அருகே இறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

- ஒபாவ்வா படை – கர்நாடக மாநிலத்தில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் போலீஸ் துறையிலேயே தனிப்படை உருவாக்கப்பட்டு, அதற்கு ஒபாவ்வா படை என பெயர் சூட்டப்பட்டுள்ளது.
  - சித்ரதுர்கா பகுதி மன்னர் காலத்தில் உருவாக்கப்பட்ட பெண்கள் படையின் பெயரும் ஒபாவ்வா என்பது தான், இப்படையானது பெண்கள் பாதுகாப்பை முன்னிலைப்படுத்தியும், பெண்களுக்கு எதிராக ஏற்படும் வன்முறைகளை கட்டுப்படுத்தும் நோக்கிலும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

- முக்கிய மந்திரி கன்னியா உத்தான் யோஜனா – பீகார் மாநிலத்தில் பெண்குழந்தை பிறப்பு விகிதம் மற்றும் பாலின விகிதம் ஆகியவற்றை அதிகப்படுத்தும் நோக்கில் முக்கிய மந்திரி கன்னியா உத்தான் யோஜனா தலைநகர் பாட்னாவில் பீகார் மாநில அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம்
  - பெண் குழந்தை பிறந்தவுடன் 2000 ரூபாயும்
  - ஆதார் அட்டை எடுத்தவுடன் 1000 ரூபாயும்
  - தடுப்பூசி அனைத்தும் போட்டவுடன் 200-ரூபாயும்
  - பள்ளிகளில் சீருடைக்காக 5ம் வகுப்பு வரை ஆண்டுதோறும் 700 ரூபாயும் வழங்கப்படும் என பீகார் மாநில அரசு அறிவித்துள்ளது.

## உலக நிகழ்வுகள்

- உலகத்தை அச்சுறுத்திய ஹிரோஷிமா அணுகுண்டு தாக்குதலின், 73வது ஆண்டு நினைவு தினம் - 06.08.2018
    - 1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ம் தேதி ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தின் மீது "Little boy" என்ற அணுகுண்டை அமெரிக்கா வீசியது.
    - மூன்று நாட்கள் கழித்து நாகசாகி நகரத்தின் மீது "fat boy" என்ற அணுகுண்டை வீசியது. இந்த அணுகுண்டு தாக்குதலால் உயிரிழந்தவர்களின் 73வது நினைவு தினம் ஆகஸ்ட் 06 அனுசரிக்கப்படுகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- பிஜி நாட்டில் நடைபெற்ற 2018 சர்வதேச கோல்ப் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர் சுகன்ஜீத் புல்லர் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

- வாஷிங்டன் ஓபன் டென்னிஸ் போட்டியில் உலகின் மூன்றாம் நிலை வீரரான ஜெர்மனியின் அலெக்ஸ்சாண்டர் வெரேவ் ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாரை வென்று சாதனைப் படைத்துள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- இந்தியாவில் இணையதள சேவையின் வேகத்தை அதிகரிக்க உதவும் G-SAT-11 என்னும் செயற்கை கோளை வரும் நவம்பர் மாதம் 30ம் தேதி விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
    - ஜிசாட் 11 செயற்கைகோள் அதிக எடை கொண்டுள்ளதால் (5700 கி.கி) இச்செயற்கை கோளை பிரான்ஸ் ∴கயானாவில் உள்ள யூரோப்பியன் விண்வெளித் தளத்தில் இருந்து ஏவ திட்டமிட்டுள்ளது.
- **குறிப்பு**
    - இதனால் நிலவை ஆய்வு செயவதற்கான சந்திராயன்-2

விண்கலத்தை அனுப்பும் இஸ்ரோவின் திட்டம் டிசம்பர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## முக்கிய தினங்கள்

- தேசிய கைத்தறி தினம் - ஆகஸ்ட் 07
  - கைத்தறி தொழிலின் முக்கியத்துவமும், அது சமூக வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பங்களிப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், கைத்தறி தொழிலை மேம்படுத்தி கைத்தறி நெசவாளர்களின் பெருமையை உயர்த்திட வேண்டுமென்ற உயரிய நோக்கிலும் ஆகஸ்ட் 7ஆம் தேதி தேசிய கைத்தறி தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
  - இத்தினம் 2015 ஆகஸ்ட் 7 முதல் ஆண்டு தோறும் கடைபிடிக்கப்படுகிறது.

## நியமனங்கள்

- டெல்லி உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக ராஜேந்திர மேனன் (பாட்னா உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி) என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - பாட்னா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக எம்.கே.ஷா (குஜராத் உயர்நீதிமன்ற நீதிபதி) என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - ராஜஸ்தான் உயர்நீதிமன்ற நீதிபதியான கால்பேஷ் சத்யேந்திர ஜாவேரி, ஒடிஷா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

We Shine Academy™